# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க,
# தேசிய விலங்கினக் காட்சிச்சாலைச் சட்டம்

---

*[1982 நவம்பர் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1982, திசெம்பர் மாதம் 03 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 65 — தபாற் செலவு: சதம் 50

1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க,
தேசிய விலங்கினக் காட்சிச்சாலைச் சட்டம்

[1982, நவம்பர் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 46/75
1303

**தேசிய விலங்கினக் காட்சிச்சாலையின் நிருவாகத்திற்கும் முகாமைக்கும் ஏற்பாடு செய்வதற்கும், விலங்கினக் காட்சிச்சாலை அபிவிருத்தி, நலன்புரி நிதியத்தைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, தேசிய விலங்கினக் காட்சிச்சாலைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. (1) தேசிய விலங்கினக் காட்சிச்சாலையை நிருவகிக்கும் நோக்கத்திற்காக :— தேசியவிலங்கினக் காட்சிச்சாலையின் நிருவாகம்.

(அ) தேசிய விலங்கினக் காட்சிச்சாலையின் பணிப்பாளராக இருப்பதற்கென அல்லது செயற்படுவதற்கென ஆளொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) தேசிய விலங்கினக் காட்சிச்சாலையின் பிரதிப் பணிப்பாளர்களாகவும் உதவிப் பணிப்பாளர்களாகவும் இருப்பதற்கென அல்லது செயற்படுவதற்கென ஆட்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்படும் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும், பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் I

## தேசிய விலங்கினக் காட்சிச்சாலைப் பணிப்பாளரின் பொதுவான கடமைகளும் தத்துவங்களும்

3. (1) இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பிடு செய்யப்படும் தேசிய விலங்கினக் காட்சிச்சாலையின் பணிப்பாளரே இதனகத்துப்பின்னர் "விலங்கினக்காட்சிச்சாலை" எனக் குறிப்பீடு செய்யப்படும் தேசிய விலங்கினக் காட்சிச்சாலையின் அலுவல்களினதும் தொழில்களினதும் கண்காணிப்புக்கும், கட்டுப்பாட்டுக்கும், திருவாகத்திற்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும். விலங்கினக் காட்சிச் சாலையின் பொதுவான நிருவாகம்.

(2) பணிப்பாளர், (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, தமது தத்துவங்களுள் எதனையும் விலங்கினக் காட்சிச்சாலையின் பிரதிப் பணிப்பாளரொருவருக்கு அல்லது உதவிப் பணிப்பாளரொருவருக்கு அல்லது வேறு எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

பணிப்பாளரின் கடமைகள்.

4. பணிப்பாளர், விலங்கினக் காட்சிச்சாலைக்குள் பின்வருவனவற்றிற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம் :—

(அ) சுற்றடைப்புக்களையும் வீதிகளையும் கட்டிடங்களையும் வேலிகளையும் நிருமாணிப்பதற்கும், நீர் வழங்கல்களை ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் விலங்கினக் காட்சிச்சாலையின் முகாமைக்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு வேலைகளை நிறைவேற்றுவதற்கும் ஆன நடபடிகள் ;

(ஆ) விலங்கினக் காட்சிச்சாலையிலுள்ள விலங்குகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடபடிகள் ;

(இ) வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ஆன நடபடிகள் ;

(ஈ) வாகனங்களை நிறுத்துவதற்கென விசேட இடப்பரப்புகளை ஏற்பாடு செய்வதற்கான நடபடிகள் ;

(உ) விலங்கினக்காட்சிச்சாலையைப் பார்வையிட வருபவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடபடிகள் ; அத்துடன்

(ஊ) விலங்கினக் காட்சிச்சாலையினால் பேணிவரப்படும் பண்ணையையும் பண்ணை விளைபொருளையும் பாதுகாப்பதற்கான நடபடிகள்.

தவறுகளும் தண்டங்களும்.

5. (1) (அ) தோதான கட்டணத்தைச் செலுத்துவதன்மீது, விலங்கினக் காட்சிச்சாலையின் நுழைவாயிலில் வழங்கப்படும் செல்லுபடியான நுழைவுச்சீட்டொன்றில்லாமல், விலங்கினக் காட்சிச்சாலையினுள் நுழைகின்ற ;

(ஆ) தமது சீட்டைக் காண்பிக்குமாறு பணிப்பாளரால் அல்லது எவரேனும் பிரதிப் பணிப்பாளரால் அல்லது எவரேனும் உதவிப் பணிப்பாளரால் அல்லது பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் வேண்டப்படும்போது அவ்விதம் காண்பிக்க மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ;

(இ) வேறு எவரேனும் ஆள் விலங்கினக் காட்சிச்சாலையினுள் நுழைவதை இயலச்செய்வதற்கென, தமக்கு வழங்கப்பட்ட சீட்டை விற்கின்ற அல்லது கைமாற்றுகின்ற அல்லது விற்கவோ கைமாற்றவோ எத்தனிக்கின்ற ;

(ஈ) விலங்கினக் காட்சிச்சாலையினுள் விலங்குகளுக்கு உணவூட்டப்படலாகாதென அறிவித்தலொன்றின்மூலம் தடைவிதிக்கப்பட்டுள்ள ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் விலங்கிற்கு உணவூட்டுதலில் ஈடுபடுகின்ற ;

(உ) விலங்கினக் காட்சிச்சாலையினுள் ஏதேனும் வானொலிப் பெட்டியோ அல்லது வேறு ஏதேனும் ஒலிச் சாதனமோ பயன்படுத்தப்படலாகாதென அறிவித்தலொன்றின்மூலம் தடைவிதிக்கப்பட்டுள்ள ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் வானொலிப்பெட்டியையோ அல்லது வேறு ஏதேனும் ஒலிச் சாதனத்தையோ பயன்படுத்துகின்ற ;

(ஊ) பணிப்பாளரின் முன் அங்கீகாரமின்றி, விலங்கினக் காட்சிச்சாலையினுள் ஒளிப்பட உபகரணங்களைப் பயன்படுத்துகின்ற;

(எ) பணிப்பாளரின் முன்னங்கீகாரமின்றி ஏதேனும் விலங்கினை விலங்கினக் காட்சிச்சாலையினுள் இட்டுச் செல்கின்ற;

(ஏ) விலங்கினக் காட்சிச்சாலையினுள் ஒரு துப்பாக்கியை. தோட்டாவை, ஏதேனும் சுடுபடைக்கலத்தை அல்லது ஏதேனும் விவரணத்தினதான வேறு வெடிப் பொருளைக் கொண்டுசெல்கின்ற அல்லது தனதுடைமையில் அல்லது தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கின்ற;

(ஐ) ஏதேனும் துப்பாக்கியை, வெடிபறிய விடுகின்ற அல்லது வெடிபறிய விட எத்தனிக்கின்ற அல்லது ஏதேனும் வெடிப்பொருளைப் பயன்படுத்துகின்ற;

(ஒ) விலங்கினக்காட்சிச்சாலையினுள் எந்த இடப்பரப்பிற்குள் நுழையப்படலாகாதென அறிவித்தலொன்றின்மூலம் தடைவிதிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் இடப் பரப்பினுள் நுழைகின்ற;

(ஓ) விலங்கினக் காட்சிச்சாலைக்குள் ஏதேனும் விலங்கைத் தூண்டிவிடுகின்ற, சினமூட்டுகின்ற, குழப்புகின்ற, நச்சரிக்கின்ற, அல்லது காயப்படுத்துகின்ற, அல்லது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் விலங்கின் பாதுகாப்பிற்கு அல்லது சுகாதாரத்திற்கு எவ்வகையிலேனும் பாதகமாக அமையும் வேறு ஏதேனும் முறையில் செயற்படுகின்ற;

(ஔ) விலங்கினக் காட்சிச்சாலையின் ஊழியர் எவரையும் முடக்குகின்ற, அச்சுறுத்துகின்ற அல்லது இடையூறு செய்கின்ற;

(க) விலங்கினக் காட்சிச்சாலைக்குச் சொந்தமான ஏதேனும் ஆதனத்தை அகற்றுகின்ற அல்லது சேதப்படுத்துகின்ற;

(ங) பணிப்பாளரால் ஏற்பாடுசெய்யப்பட்ட வாகன நிற்பாட்டிடப்பரப்புகளுக்கு வெளியே வாகனமொன்றை நிற்பாட்டுகின்ற;

(ச) பணிப்பாளரின் முன்னங்கீகாரமின்றி, விலங்கினக் காட்சிச்சாலைக்குள் ஏதேனும் துண்டுப்பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை, சுவரொட்டியை, அறிவித்தலை அல்லது அத்தகைய ஏதேனும் ஆவணத்தை விநியோகிக்கின்ற அல்லது வெளிக்காட்டிவைக்கின்ற;

(ஞ) விலங்கினக் காட்சிச்சாலையினுள் மோட்டார் வாகனங்கள் செலுத்தப்படலாகாதென தடைவிதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் மோட்டார் வாகனமொன்றைச் செலுத்துகின்ற; அத்துடன்

(ட) பணிப்பாளரின் முன்னங்கீகாரமின்றி, விலங்கினக் காட்சிச்சாலைக்குள் ஏதேனும் பொருளை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கின்ற,

ஆள் எவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்படும் ஒவ்வொராளும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.

தவறுகளை இணக்குவதற்கான தத்துவம்.

6. (1) ஐந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் தவறை, பணிப்பாளர், புரியப்பட்ட தவறுக்கான இணக்கமாக நூறு ரூபாக் கொண்ட ஒரு பணத்தொகையை ஏற்றுக்கொள்வதன்மூலம் எந்நேரத்திலேனும் இணக்கலாம்; அத்துடன், அத்தகைய ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆளுக்கெதிராகக் குற்றவழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளவிடத்து, பணிப்பாளரானவர், எந்த நீதிமன்றத்தின் முன்னர் குற்றவழக்கானது முடிவுறுதுள்ளதோ அந்த நீதிமன்றத்தின் சம்மதத்துடன், தீர்ப்பின் முன்னர் எந்நேரத்திலேனும் அத்தகைய தவறை இணக்கலாமென்பதுடன், அத்தகைய குற்றவழக்கைக் கைவாங்கவும் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணத்தொகையானது, இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட விலங்கினக் காட்சிச்சாலை அபிவிருத்தி, நலன்புரி நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

விலங்கினக் காட்சிச்சாலை அபிவிருத்தி, நலன்புரி நிதியத்துக்குச் செலுத்தப்படும் குற்றப்பணத்தின் பங்கு.

7. தவறுளர் ஒருவர் தவறொன்றுக்கு எந்த நீதிமன்றத்தின் முன்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுகின்றாரோ அந்த நீதிமன்றம், அத்தகைய தவறுக்காக விதிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் குற்றப்பணம் தொடர்பில், அக்குற்றப்பணத்தின் அரைவாசிக்கு மேற்படாத ஏதேனும் பங்கோ அல்லது உள்ளபடியே அறவிடப்படவேண்டியவாறான அத்தகைய தொகையின் அரைவாசிக்கு மேற்படாத ஏதேனும் பங்கோ, இச்சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட விலங்கினக் காட்சிச்சாலை அபிவிருத்தி, நலன்புரி நிதியத்துக்கு அளிக்கப்படல் வேண்டுமெனப் பணிப்பது அந்நீதிமன்றத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

## பாகம் II

### விலங்கினக் காட்சிச்சாலை அபிவிருத்தி, நலன்புரி நிதியம்

விலங்கினக் காட்சிச்சாலை அபிவிருத்தி, நலன்புரி நிதியம்.

8. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, விலங்கினக் காட்சிச்சாலை அபிவிருத்தி, நலன்புரி நிதியம் என அழைக்கப்படவேண்டிய நிதியமொன்று தாபிக்கப்படல் வேண்டும்; இது இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2) பின்வருவன நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:—

(அ) எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடை என்ற வகையாகப் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்;

(ஆ) ஆரும் பிரிவின்கீழ் பணிப்பாளரால் அறவிடப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்;

(இ) குற்றப்பணங்கள் என்ற வகையாக அறவிடப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்;

(ஈ) தோட்ட விளைபொருளின் விற்பனையின்மூலம் பெற்றுக் கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்; அத்துடன்

(உ) எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து ஏதேனும் வருமானம் என்ற வகையாக விலங்கினக் காட்சிச்சாலையால் பெறப்படும் ஏனைய பணத்தொகைகள் யாவும்.

(3) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினது செயலாளரின் முன்னைய அங்கீகாரத்துக்கு அமைவாக, பின்வரும் பணத்தொகைகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) விலங்கினக் காட்சிச்சாலைக்கு வரும் பார்வையாளர்களுக்கு சார்புச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்;

(ஆ) விலங்கினக் காட்சிச்சாலையின் ஊழியர்களுக்கு நலன்புரி, ஊக்குவித்தல் திட்டங்களை ஏற்பாடுசெய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்; அத்துடன்

(இ) வேறு விதத்தில் குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, இச்சட்டத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படுகின்ற செலவினங்கள் யாவும்.

(4) நிதியத்தின் நிருவாகத்துக்குப் பணிப்பாளர் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(5) நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### நானாவிதம்

9. (1) விலங்கினக் காட்சிச்சாலை தொடர்பிலான எல்லாக் கருமங்களிலும் விடயங்களிலும் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கும் நோக்கத்திற்காகவும் அமைச்சருக்கு விதப்புரைகள் செய்யும் நோக்கத்திற்காகவும் அமைச்சர் ஆலோசனைக் குழுவொன்றை நியமிக்கலாம் என்பதோடு, இக்குழு, தவிசாளராகப் பணிப்பாளரையும், அத்துடன் வேறு பதினொரு ஆட்களையும் கொண்டிருத்தலும் வேண்டும். ஆலோசனைக் குழு.

(2) ஆலோசனைக் குழுவின் கூட்டங்கள் ஒவ்வோராண்டும் குறைந்தது இரு முறையேனும் நடாத்தப்படுதல் வேண்டும்.

(3) எந்த நடவடிக்கைமுறை பற்றிய கருமத்தில் ஏற்பாடு எதுவும் விதித்துரைக்கப்படவில்லையோ அந்த நடவடிக்கைமுறை பற்றிய கருமங்களில் ஆலோசனைக்குழு தனது சொந்த நடவடிக்கைமுறையைத் தீர்மானிப்பதற்கு உரித்துடையதாயிருத்தல் வேண்டும்.

உட்பிரவேசிப்பதற்கும் மீள உடைமையிலெடுப்பதற்குமான தத்துவம்.

10. (1) விலங்கினக் காட்சிச்சாலையின் ஆதனமாயிருப்பதாகக் கருதப்பட்ட ஏதேனும் விலங்கு, எவரேனும் ஆளின் கட்டுக்காப்பில் அல்லது உடைமையில் இருக்கின்றதென பணிப்பாளர் நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றவிடத்து, பணிப்பாளர் அல்லது அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆள்—

(அ) எந்த வளவில் அல்லது வாகனத்தில் அத்தகைய விலங்கு காணப்படலாம் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருக்கின்றாரோ அந்த ஏதேனும் வளவினுள் அல்லது வாகனத்தினுள் நுழைதலும் பார்வையிடுதலும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய விலங்கினை மீளவும் உடைமையிலெடுத்தலும்,

அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) எந்த ஆளின் உடைமையிலிருந்து அல்லது கட்டுக்காப்பிலிருந்து ஏதேனும் விலங்கு (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அகற்றப்பட்டதோ அந்த ஆள், அத்தகைய விலங்கை மீளவும் உடைமையிலெடுப்பதற்கு விரும்பினால், அத்தகைய விலங்கு அவருக்குச் சொந்தமானது என்பதனை எண்பிக்கும்பொறுப்பு அத்தகைய ஆளைச் சார்ந்ததாக இருத்தல் வேண்டும்.

பகிரங்க அலுவலர்களுக்கான பாதுகாப்பு.

11. இச்சட்டத்தின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, எவரேனும் பகிரங்க அலுவலருக்கு எதிராக தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அமைதலாகாது.

முட்டுக்கட்டைகளும் தடைகளும்.

12. இச்சட்டத்தினால் எவரேனுமாளுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை அல்லது கடமைகளை அவ்வாள் பிரயோகிக்கின்றபோது அல்லது புரிகின்றபோது அந்த ஆளைத் தாக்குகின்ற, அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற, அவரை அச்சுறுத்துகின்ற, பயமுறுத்துகின்ற நிந்திக்கின்ற அல்லது அவமானப்படுத்துகின்ற ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் நூறு ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாகுதலும் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

13. (1) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது இச்சட்டத்தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒவ்வோர் ஒழுங்குவிதியும், கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர் சாத்தியமான அளவு விரைவில் அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி எதுவும் ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப் படுதல் வேண்டும்.

14. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி— பொருள்கோடல்.

"விலங்கு" என்பது தண்டெலும்புள்ள, தண்டெலும்பில்லாத ஏதேனும் விலங்கு எனப் பொருள்படும் என்பதோடு, பறவைகள், மீனினம் அல்லது நகருயிர் என்பவற்றின் எல்லா வகுதிகளையும் உள்ளடக்கும்; அத்துடன்

"தேசிய விலங்கினக் காட்சிச்சாலை" என்பது இரத்மலானையிலுள்ள பகிரங்க நீர்வாழுயிரினக் காட்சிச்சாலையையும், விலங்கினப் பண்ணையையும் அத்துடன் ரம்புக்கனை பின்னவெலையிலுள்ள யானை வளர்ப்பு நிலையத்தையும் உள்ளடக்கும்.